## வட மாகாண சபை - 2019

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வட மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொழிப்பறிக்கை 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவு பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வட மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வட மாகாண சபையினால் 2011 ஆம் ஆண்டிலே ரூபா8,500,000 வுக்கு கொள்வனவு செய்யப்பட் எம்பியூலன்ஸ் வண்டியொன்று 9000 கி.மீ ஓடப்பட்ட பின்னர் விபத்திற்குள்ளாகியிருந்தது. இந்த வண்டியை திருத்துவதற்கு பதிலாக முறையற்ற விதத்தில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் | முதலாவது விசாரணை அறிக்கை பூரணமற்றது. பின்னர் மீண்டும் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் இது இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. | விசாரணை நடவடிக்கைகளை அவசரமாக நிறைவு செய்து மாகாண நிதி விதியின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன்வென்ட்ரி பதிவேட்டில் நீக்குவதற்கு மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் நீக்குவதற்கு மீளாய்வாண்டிற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | முல்லைத்தீவு கல்வி வலயத்தில் அமைந்துள்ள 66 பாடசாலைகளுக்காக தர உளளீட்டிற்காக 2019 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா3,677,206 செலவு செய்யப்படாமல் வங்கி கணக்குகளில் காணப்படுகின்றது. | இந்த பணத்தின் பகுதியொன்று மாணவ செயற்பாட்டிற்காக செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியதை கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்படும். | வழங்கப்படுகின்ற பணம் தாமதமின்றி உரிய நோக்கத்திற்காக உபயோகப்படுத்தப் பட வேண்டும். |
| (இ) | வடமாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா1,499,535 மோசடியாக பெறப்பட்டிருந்தது. | இது தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கை 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி வடமாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகள் துரிதமாக நிறைவு செய்யப்பட்டு பரிந்துரை நடைமுறைப் படுத்துவது மற்றும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையாக நடைமுறைப்படுத் தப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பான பொறுப்பு திறைசேரி உட்பட அவ்வவ் நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் வட மாகாண சபையின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(அ) 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன எனவும்.

(ஆ) 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன எனவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் V ஆவது பந்தியின் 7.1 ஆம் பிரிவு | வட மாகாண நன்னடத்தை பாதுகாப்பு மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் கல்வி திணைக்களத்திற்கு கடமைக்கு சமூகமளிக்காத 08 உத்தியோகத்தர்களின் சேவையை பதவிவறிதாக்கல் மேற்கொள்ளப்படாமல் 03 மாதத்திற்கும் 6 வருடங்களுக்குமிடையேயான காலம் தாமதமாகியிருந்தது. | இந்த உத்தியோகத்தர் களின் சேவையை பதவிவறிதாக்கும் கடிதத்தை துரிதமாக விநியோகிக்குமாறு உரிய திணைக்களத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செலவு விடயம் 16 இன் ஏற்பாடுகளில் நூற்றுக்கு 36 சேமிக்கப்பட்டிருந்ததுடன் செலவு விடயம் 09 இல் காணப்பட்ட ரூபா491,148,908 ஏற்பாடு வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. அத்தோடு செலவு விடயம் 12 இற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா12,918,500 வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மாற்றப்பட்ட அந்த ஏற்பாடும் முழுமையாக செலவிடப்பட்டிருக்கவில்லை. | பொதுதிறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்கப் பெறாமையின் காரணமாக ஏற்பாடு சேமிப்பு ஏற்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்கள் கிடைக்கப் பெறாமையின் காரணமாக உரிய செலவுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் உரிய நோக்கத்திற்காக உபயோகப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) சபை செயலாளர் காரியாலயம் மற்றும் பிரதி பிரதான செயலாளர் கொத்தணி (Cluster) ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீண்டெழும் ஏற்பாடுகளில் முறையே நூற்றுக்கு 75 மற்றும் 51 சேமிக்கப்பட்டிருந்தது. | மாகாண சபை செயற்படுத்தப்பட்டமையும் மத்திய அரசின் பெறுவனவுகள் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படையில் கிடைக்கப் பெறாமையும் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் உரிய நோக்கத்திற்காக உபயோகப்படுத்தப் பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டிலே வட மாகாண சபையின் மூலதன மற்றும் மீண்டெழும் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது முறையே ரூபா 1,901 மில்லியன் மற்றும் ரூபா919 மில்லியன் ஆகும். | மூலதன செலவுகளுக்காக கட்டுநிதி போதுமான அளவில் கிடைக்கப் பெறாமை, சில சில செயற்திட்டத்திற்காக செலவுகள் வைக்கப்படாமை மற்றும் செலவுகளுக்கான அறிவுரைகள் கிடைக்கப் பெறாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் மூலதன செலவுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அத்தோடு மத்திய அரசிலிருந்து கிடைக்கப் பெற வேண்டிய வருமானங்கள் | ஏற்பாடுகளை உபயோகப்படுத்து வதற்கு போதுமானளவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிடைக்கப் பெறாமை மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளின் ஊடாக செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்ற மையின் காரணமாக மீண்டெழும் ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. | |

**2.2 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்காக மாகாண சபையின் நிதியத்தில் ரூபா 8,040,486,055 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,213,740,548 ஆகும்.

## 3. நியதிச்சட்ட கணக்குகள் / நிதியக் கணக்குகள் / வணிக முற்பணம்

**கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்**

### 3.1 ஏனைய முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை நிறைவு செய்த இருவரிடமிருந்து ரூபா 245,094 மற்றும் இறந்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா153,967 அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சேவையை நிறைவு செய்த ஒரு உத்தியோகத்தரின் பிணையாளரிடமிருந்து கடனை அறவிடுவதுடன் ஏனைய உத்தியோகத்தர் மீண்டும் சேவைக்கு சமூகந் தந்தவுடன் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறந்த உத்தியோகத்தரின் மீதியை ஓய்வூதிய திணைக்களத்தினால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளல். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முல்லைத்தீவு கல்வி வலயத்தின் 03 பாடசாலைகள் தற்காலிகமாக கொட்டகைகளில் இயங்கி வருகின்றன. | ஒரு பாடசாலையை நிர்மாணிப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதுடன் ஏனைய 02 பாடசாலைகளுக்காக PSDG வேலைத்திட்டத்தின் கீழ் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயமொன்றாக கருதி 03 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கரைச்சி பிரதேச சபையினால் அபிவிருத்தி வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய பணம், வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்று முடக்கி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு முடக்கி வைக்கப்பட்டுள்ள கணக்குகளின் மாதாந்த மீதி ரூபா 49 மில்லியனுக்கும் ரூபா 93 மில்லியனுக்கும் இடையிலான வீச்சிலாகும். | நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட பணம் 2019 ஆம் ஆண்டிலே நிலையான வைப்புக்களுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. | மிகையாக உள்ள கட்டுநிதி பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக உபயோகப் படுத்தப்பட வேண்டும். |

### 4.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வட்டக்கச்சி ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது பொய்யான அளவீட்டின் அடிப்படையில் ரூபா 718,395 கரைச்சி பிரதேச சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுமதிசேர் வரி தொடர்பாக வலுவற்ற ஒப்பந்தக்காரருக்கு யாழ்ப்பாண வலய கல்வி அலுவலகத்தினால் பெறுமதிசேர் வரி ரூபா654,995 செலுத்தப்பட்டது தொடர்பாக | இது தொடர்பாக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் | உரிய வரியை செலுத்துவதற்கு முன்னர் அதற்காக ஒப்பந்தக்காரர் முறையாக பதிவு செய்யப்பட்டு ள்ளாரா என்பதை |

| | | | |
|---|---|---|---|
| | 2½ வருட காலத்திற்குள் எவ்வித முயற்சியும் மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. | உறுதி செய்திருக்க வேண்டியதுடன் பிரச்சினைக்குரிய கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மொத்தம் ரூபா 2,524,750 ஆன 03 காசோலைகள் மாந்தை மேற்கு கால்நடை வைத்திய அதிகாரியின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் 03 இல் வைப்பிலிடப்பட்டிருந்தது. அத்தோடு முருங்கன், கால்நடைகள் வைத்தியசாலையின் இரண்டு ஊழியர்களுக்கு மற்றும் 07 பயனாளிகளுக்கு வரையப்பட்ட ரூபா11,150,000 காசோலையும் அந்த வைத்தியரினால் பணமாக மாற்றப்பட்டிருந்தது. | உரிய திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதற்காக மாந்தை மேல் பண்ணை விலங்குகள் வைத்திய அதிகாரிக்கு உதவி வழங்கியுள்ளதை தவிர நிதிஏற்பாடுகளை செலவிடுதல் தொடர்பான விடயங்கள் பண்ணை விலங்குகள் வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இவ்வாறான முறையற்ற பணப் பரிமாற்றம் தொடர்பாக விசாரைணயொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | யா/சிதம்பரா கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளின் போது ரூபா112,527 மேலதிகமாக செலுத்துவதற்கு வடமராட்சி வலய கல்வி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. | பாடசாலைகளில் நிலவிய குழப்ப நிலை காரணமாக நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்படுவதற்கு நேர்ந்தது. நிர்மாணிக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட கொங்கிறீட் கம்பங்களும் சேதப்படுத்தப்பட்டிருந்தன. விலைச்சிட்டை தயாரிக்கப்பட்டு பாடசாலை வேலை பரிசோதகரின் உறுதிப்படுத்தலுக்கு இணங்க வலயக் கல்வி பணிப்பாளரினால் வேலை நிறைவு பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டு ரூபா285,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உண்மையாக நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்கு மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு மற்றும் முறையற்ற கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | முருங்கன் அரச கால்நடை வைத்திய அதிகாரியினால் வாழ்வாதார உதவித் திட்டத்திற்காக ஒரு மாத கால வயதுள்ள 4500 கோழிக் குஞ்சுகள் 2016 யூலை 05 ஆந் திகதிய | மாகாண கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளரின் NP/26/02/01/PSDG இலக்க மற்றும் 2016 மார்ச் 04 ஆந் திகதிய வெளியிடப்பட்ட விலை நிர்ணயக் கடிதத்திற்கு | சுற்று நிருபத்தின் அறிவுறுத்தல் களுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பாக விசாரணையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | NP/26/02/CSR/2016/02 ஆம் இலக்க அறிவுரைகளுக்கு முரணாக அதிக விலைக்கு கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 427,500 மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அமைவாக ஏற்றி இறக்குமதி கூலி உள்ளடங்கலாக கோழிக் குஞ்சொன்றின் விலை ரூபா 300 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | மத்திய அரசின் வாழ்வாதார உதவித் திட்டம் அமுலாக்கலின் போது முருங்கன் மற்றும் நானாட்டான் அரச கால்நடை வைத்திய அதிகாரிகளின் தனிப்பட்ட வங்கி கணக்குகளிற்கு முறையே ரூபா 4,025,000 மற்றும் ரூபா2,638,050 ஆன காசோலைகள் செலவு வைக்கப்பட்டிருந்தது. | நானாட்டான் பிரதேச செயலக அலுவலகத்தினால் 2016 யூன் 30 ஆந் திகதி எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் அரச கால் நடை வைத்தியர்கள் செயற்பட்டுள்ளார்கள். மாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் மாடு வழங்குனர்களுக்கு செலுத்தப்படுகின்ற பணத்திற்கு பொறுப்பு கூறுபவராக மட்டும் அரச கால்நடை வைத்தியர்கள் செயற்பட்டுள்ளார்கள் என்பது ஆரம்ப விசாரணை குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | இவ்வாறான பணப் பரிமாற்றம் செய்தல் தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | மாந்தை மேற்கு மக்களின் வாழ்வாதார விருத்திக்கு என ரூபா 2,534,750 விற்கு கொள்வனவு செய்யப்பட்ட கறவை மாடுகளுக்காக உரிய வழங்குனர்களுக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பதிலாக உரிய அரச கால்நடை வைத்திய அதிகாரியின் தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு அந்தப் பணம் செலவு வைக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஊடாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விசாரணையின் பரிந்துரைகள் துரிதமாக பெறப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 2019 ஏப்ரல் மாதத்திலே ரூபா4,041,004 வுக்கு ஏல விற்பனை செய்யப்பட்ட தொண்டமனாறு உவர் நீர்த் தடுப்பு பழைய இரும்பு கதவுகள் கொள்வனவாளரால் ஒப்பந்த நிபந்தனைகளின் படி 24 மணித்தியாலத்திற்குள் | இந்தக் கதவுகளை அறவீடு செய்து அதன் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு ஏற்படும் செலவு மிகவும் அதிகம் என்பதனால் அண்ணளவான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு குறித்த ஏலம் கோரப்பட்டது. பின்னர் அவை அகற்றப்படும் போது அந்த கேள்வி தாரர்களால் | ஏல விற்பனைப் பொருட்கள் தொடர்பாக சரியான மதிப்பீட்டை மேற்கொள்ளாமை, அகற்றப்படாத பொருட்களுக்காக ஒப்பந்த நிபந்தனைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளாமை, |

| | | |
|---|---|---|
| அப்புறப்படுத்துவதற்கு பதிலாக ஒரு மாத கால தாமதத்தின் பின்னர் அவை அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் அந்த கொள்வனவாளருக்கு மேற்குறித்த அறவிடப்பட்ட தொகையில் நூற்றுக்கு 55 சதவீதம் மீள வழங்குவதற்கு மாகாண பணிப்பாளர் நடவடிக்கை எடுத்ததனால் ரூபா 2,211,335 நிதி இழப்பொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் போது அந்த பழைய இரும்புகளின் உண்மையான பெறுமதி மதிப்பிட முடியுமாக இருந்தது. இதனால் அந்த இரும்புகளின் பெறுமதி குறைந்த தொகையாக காணப்பட்டதனால் ரூபா2,211,335 குறைவு ஏற்பட்டதே தவிர ஏல விற்பனையால் எவ்வித வருமான இழப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. | ஏல விற்பனையில் விற்கப்பட்டதென அறவிடப்பட்ட பணத்தில் மீண்டும் கொள்வன வாளருக்கு பணம் செலுத்தியமை ஆகியன தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.3 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மனனார் மாவட்ட வைத்தியசாலையில் காணப்பட்ட ரூபா 2,547,786 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகி இருந்தது. வடக்கு மாகாணத்திற்குள் ஒரு வைத்தியசாலையில் மேலதிகமாக காணப்பட்ட மருந்துகளை வேறு வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு முறைமையொன்று இல்லாமை இதற்கு ஏதுவாக இருந்தது. | இவ்வாறு காலாவதியான தொகை தொடர்பாக விசாரணைக் குழுவொன்று நிறுவப்பட்டு நட்டத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மருந்து தொகையை தரமான மட்டத்தில் பேணிக் கொள்வதற்கு ஒழுங்கு முறைமையொன்று தயாரித்துக் கொள்ள வேண்டும். |

**4.4 செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**4.4.1 தாமதமான செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 179.65 மில்லியன் 19 கட்டிட நிர்மாணம் மற்றும் புனரமைப்பு வேலைகள் ஒப்பந்த நிபந்தனைகளில் கூறப்பட்ட திகதிகளில் ஆரம்பிக்கப்படாது 30 தொடக்கம் 155 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரித்தல் தொழில்நுட்ப மதிப்பீடு ஒப்பந்த ஆவணங்களை தயாரித்தல் திட்டங்கள் நிர்மாணித்தல் ஆகியவற்றின் தொடர்பாக ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக திட்டமிட்டதன் பிரகாரம் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாது போனது. | ஒப்பந்த நிபந்தனைகளை முறித்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் |

### 4.4.2 செயற்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கூட்டுமொத்தம் ரூபா 44.73 மில்லியன் பெறுமதியான 05 கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு இடவசதி இல்லாமை, ஏனைய பாடசாலைகளுக்கு வகுப்பறை நிர்மாணிப்பின் அவசிய தேவைப்பாடு காணப்படுதல் ஆகியனவற்றின் அடிப்படையில் இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. | தேவையை சரியாக அடையாளங்கண்டு செயற்திட்டம் நடைமுறைப்படுத் தப்பட வேண்டும். |

### 4.5 நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு முரணாக வலயக் கல்வி அலுவலகத்தினால் அறவிடப்பட்ட ரூபா 12,519,303 மானவ தவணைப் பரீட்சை கட்டணம் வங்கிக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டது. அந்த பணம் எதுவும் மாகாண வருமானத்திற்கு செலவு வைக்கப்படாதிருந்ததுடன் மாணவர் நலன்களுக்காகவும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து பாடசாலைகள் சீராக இயங்காததால் தவணைப் பரீட்சைகள் மற்றும் முன்னோடிப் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை. அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெறுகின்ற பரீட்சைகளுக்காக மாணவர்களிடம் கட்டணம் அறவிடப்படாது மீதமாகவுள்ள நிதியை உபயோகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பணம் விளைவற்று வைக்கப்படக் கூடாது. |

### 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.6.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக மாகாண சபைக்கான சபா மண்டபமானது அவற்றினுள்ளே காணப்பட்ட மரத்தளபாடங்கள் கறையாண்களினால் அரித்து | பொருத்தப்பட்டிருந்த மேசை கறையான்களினால் சேதமாக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. இருப்பினும் புனரமைப்புக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில் கூடுதலான பங்கு சபா | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சேதமாக்கியதன் விளைவாக அவற்றை புனரமைப்பதற்காக ரூபா 7.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | மண்டபத்தை நவீனமயப்படுத்துவதற்கு, சுயமாக இயங்கும் வீடியோ கட்டமைப்பொன்றை பொருத்துவதற்கு மற்றும் தளபாடங்களை நிலைத்திருப்பதை மாற்றுவதற்காகும். |

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுமொத்தம் 40468 ஆன வடக்கு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 6336 வெற்றிடங்கள் காணப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 02/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய சுற்றுநிருபம் நடைமுறைக்கு வந்தது முதல் 1463 வெற்றிடங்களினை நிரப்புவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டு அதில் 272 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர்களில் வெற்றிடங்கள் முறையே 1535 மற்றும் 444 ஆக காணப்பட்டதுடன் 13 மிகையாகவும் காணப்பட்டது. | கௌரவ ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் சில வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய வெற்றிடங்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தேவையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மிகை ஊழியர் தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையின் பொருட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகையான உத்தியோகத்தர் களை ஆக்கபூர்வமாக நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |